# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 16 வெள்ளிக்கிழமை (30-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 183


## ஆர்ஜென்ரீனாக் கப்பல் குண்டு வெடிப்பில் சேதம்!

### திருமலை துறைமுகப் பகுதியில் சம்பவம்

திருகோணமலை, மே 30

திருகோணமலைத் துறைமுகத்துக்கு வெளியே தரித்துநின்ற ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த 'அதேனா' (Athena) என்னும் சரக்குக் கப்பல் நேற்று அதிகாலை குண்டுவெடிப்பில் சேதமடைந்தது.

திருகோணமலை பிரிமா ஆலைக்கு 52 ஆயிரம் மெற்றிக் தொன் கோதுமை தானியத்தை ஏற்றிவந்த கிரேக்கக் கொடி பறக்கவிடப்பட்ட இக் கப்பல் கடந்த 23 ஆம் திகதி முதல் அங்கு தரித்து நின்றது.

நேற்று அதிகாலை குண்டுவெடிப்பில் இக் கப்பல் சிக்கியதில் கப்பலின் என்ஜின் அறை சேதம்டைந்தது. உடைப்பு ஏற்பட்டு கடல் நீரும் உட்புகுந்தது.

இந்தச் சம்பவத்தின் போது கப்பலில் இருந்த எவரும் காயமடையவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குளாயில் நடந்த சமரில் 2 டோறா படகுகள் சேதம்

கொழும்பு, மே 30

நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டம் கொக்குளாய் பகுதியில் கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையில் நடந்த சமரில் கடற்படையினரின் இரு டோறாப் படகுகள் சேதமடைந்தன என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மோதலில் கடற்படையைச் சேர்ந்த ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளானார்.

இம்மோதலில் கடற்புலிகளின் 3 படகுகள் பலத்த சேதமடைந்தன என்று பாதுகாப்பு வட்டாரங்கள் ஏற்கனவே அறிவித்திருந்தன.

(இ-150-3)

## கால்நடையாக ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் தாக்குதல்

மட்டக்களப்பு, மே 30

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதியில் வந்தாறுமூலையில் நேற்று அதிகாலை 3-45 மணியளவில் கால்நடையாகச் சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்

(8ஆம் பக்கம் பார்க்க)

# குருநகர் நோக்கி வந்த படகு கவிழ்ந்ததில் 19 பேர் பலி!

## 13 சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டதாக அறிவிப்பு

## பள்ளிக் குடா கடல் பகுதியில் புதனன்று சம்பவம்

யாழ்ப்பாணம், மே 30

நாச்சிக்குடாவில் இருந்து புறப்பட்டு குருநகர் நோக்கி வந்து கொண்டிருந்த படகு ஒன்று பள்ளிக்குடாப் பகுதியில் கவிழ்ந்ததில் அந்தப் படகில் பயணம் செய்தவர்களில் 19 பேர் உயிரிழந்ததாக அஞ்சப்படுகிறது. உயிரிழந்தவர்களில் 13 பேரின் சடலங்கள் பள்ளிக் குடாப் பகுதியில் மீட்கப்பட்டதாக புலிகளின் குரல் வானொலி நேற்று இரவு தெரிவித்தது.

படையினர் வன்னியில் ஆரம்பித்துள்ள ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைக்கு அஞ்சி படகு மூலம் குருநகர் நோக்கி வந்து கொண்டிருந்தவர்களுக்கே இந்த அனர்த்தம் ஏற்பட்டது.

மூன்று படகுகள் ஒன்றுடன் ஒன்று தொடுக்கப்பட்டு வந்து கொண்டிருந்த சமயம் கடும் காற்று வீசியது. அப்பொழுது மூன்றாவது படகு நீரில் மூழ்கியது.

நேற்று முன்தினம் காலை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## "ஐயோ எங்களை காப்பாற்றுங்கள்" என படகிலிருந்தோர் அபயக்குரல் எழுப்பினர்

### மறுவிநாடி படகு இரண்டாகப் பிளந்து மூழ்கியது

யாழ்ப்பாணம், மே 30

''படகுக்குள் தண்ணீர் வந்து விட்டது ஐயோ! எங்களைக் காப்பாற்றுங்கள்'' என்று படகுக்குள் இருந்தவர்கள் அபயக்குரல் எழுப்பினர். அடுத்த வினாடி அந்தப்படகு இரண்டாகப் பிளந்து கடலில் மூழ்கியது.

நாச்சிக்குடாவில் இருந்து குருநகர் நோக்கி வந்த படகு ஒன்றில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இறந்தோரில் 16 பேர் பற்றிய விவரம்

யாழ்ப்பாணம், மே 30

படகு விபத்தில் இறந்தோரில் 16 பேரின் விவரம் வருமாறு;-

★ கந்தன் பாலு (வயது 45)

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தனங்களப்பு பகுதியில் படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம், மே 30

தனங்களப்பு, தச்சன் தோப்பு, மறவன்புலவு பகுதிகள் நேற்றுக் காலை சுற்றி வளைக்கப்பட்டு கடும் தேடுதல் இடம் பெற்றது.

நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் அப்பகுதியில் இடம் பெற்ற சம்பவம் ஒன்றில் படையினர் தரப்பில் ஒருவர் உயிரிழந்ததையடுத்தே நேற்று தேடுதல் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## மானிப்பாயில் கண்ணிவெடி!

### இருவர் பலி; ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மே 30

மானிப்பாய் கட்டுடை, பிரதான வீதி, தபாற் கந்தோர் முன்பாக நேற்றுக் காலை 8.30 மணி அளவில்இடம் பெற்ற கிளைமோர் கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவத்தின் போது வீதியால் சென்று கொண்டிருந்தவர்களான காரைநகர் மருதடியைச் சேர்ந்த நாதன் சண்முகம் (வயது 61) மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த இளைய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தையில் இரு தரப்பினரும் தொடர்ந்து ஷெல் தாக்குதல்

ஓமந்தைப்பகுதியில் நிலை கொண்டுள்ள ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைத் துருப்புக்கள் மீது நேற்று முழுநாளும் விடுதலைப் புலிகள் ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்றிரவு வரை இருதரப்பினரும் மாறி மாறி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் இரவு நடந்த தாக்குதலில் 3 இராணுவத்தினர் உயிரிழந்ததாகவும், [illegible] ரி. என். எல். வானொலி அறி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## செய்திச் சரம்

### கிரனேட்டுக்கு இன்ஸ்பெக்டர் பலி!

கொழும்பு, மே 30

பொலீஸாருக்கு கிரனேட் மற்றும் குண்டு பயிற்சிகளை அளித்துக் கொண்டிருந்த பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் அவரின் கிரனேட் வெடித்ததில் கொல்லப்பட்டார்.

களுத்துறை பொலீஸ் பயிற்சிக் கல்லூரியில் இச் சம்பவம் இடம் பெற்றது.

''கிரனேட்'' ஒன்றின் கிளிப்பை கழற்றிய அவர் கிரனேட்டை தூர எறிவதற்குப் பதிலாக தமக்கு அருகில் போட்டபோது அது வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-150)

### ஸ்ரீமாவோ சீனா பயணம்

கொழும்பு, மே 30

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சீன அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் நேற்றுக்காலை அந்த நாட்டுக்குப் பயணமானார்: அவர் சீனத்தலைவர்களுடன் இருதரப்பு விடயங்கள் குறித்து பேச்சு நடத்துவார்.

(இ-4)

### 3 கப்பல்கள் இன்று சேவை

யாழ்ப்பாணம், மே 30

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று 3 கப்பல்களில் பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இன்று கப்பலில் செல்ல பெயர் பதிவு செய்தவர்களை காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

பட்டியல் இலக்கம் 579 க்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் —

அப் பட்டியலில் உள்ளவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## குமாரசாமி தியாகராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட குமாரசாமி தியாகராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) 26 - 05 - 97 இல் கனடாவில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான பிரசித்த நொத்தாரிசு குமாரசாமி இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ் சென்ற சச்சிதானந்தம் மற்றும் தையல்நாயகி (செட்டியார் மடம், அராலி வடக்கு), ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ் சென்றவர்களான மகேஸ்வரி, தணிகாசலம், லோகேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், சூரியகுமார் (லண்டன்), நாகராஜா (கனடா), கைலாசநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நளாயினி, சுமி, சிவானி ஆகியோரின் அன்பு மாமனாரும், திலகவதி, சிவகுருநாதன் (கண்டி), யோகநாதன் (பிரான்ஸ்), உமாவதி சரவணபவானந்தன் (கனடா), ஜெயானந்தன் (லண்டன்), காலஞ் சென்ற சிவானந்தன் (ரோறா, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், இரத்தினேஸ்வரி சிவஞானசுந்தரம் (கனடா), கௌரி ஜெயானந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாய் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29 - 05 - 1997 இல் கனடாவில் நடைபெற்றன.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. தையல்நாயகி
செட்டியார் மடம்,
அராலி வடக்கு.

10 S. T. DENNIS DRIVE,
APT 0907 DON MILLS,
M3C1E9,
TORONTO - ONTARIO,
CANADA.

(47494)

## திருமதி மார்க்கண்டு சரஸ்வதி

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவி மார்க்கண்டு சரஸ்வதி 28-05-97இல் கனடாவில் காலமானார்.

அன்னார் கனகசபை (டாக்டர், லைபீரியா), சந்திராதேவி (கொழும்பு), கமலாதேவி (ஆசிரியர்- Convent- வவுனியா), குணரத்தினம் (முன்னாள் சிமெந்துக்கூட்டுத்தாபன அதிகாரி). அரியரத்தினம் (உரிமையாளர், சண்ரான்ஸ்போட், சண்ரேட்ஸ், ஸ்ரான்லி வீதி), ஜீவானந்தம் (கனடா), சூரியதாஸ் (கனடா) விமலாதேவி (கணக்காளர், லங்கா சிமெந்து லிமிட், கொழும்பு), விமலதாஸ் (டென்மார்க்), உமாதேவி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும். ராஜேஸ்வரி (லைபீரியா), வேலாயுதம் (இளைப்பாறிய அதிபர். மாத்தளை). இரத்தினம் (விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி, வவுனியா), கமலாதேவி (கனடா), லலிதா காந்தி, திருச்செல்வநாதன் (கொழும்பு), ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 31-05-97 இல் கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மா. அரியரத்தினம்.
(மகன்)

399, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(47484)

## நா.சண்முகம் (பத்மநாதன்-மணியம்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயில் வசித்தவருமாகிய நா. சண்முகம் (மணியம்) என்பவர் 29-5-97 அன்று அகால மரணமடைந்துள்ளார்.

அன்னார் விஜயலஷ்மியின் (விசயம்) அன்புக் கணவரும் பேள்ரஞ்சினி (யாழ். பல்கலைக் கழகம் 1 ஆம் வருட கலைப்பீடம்), டிக்ஷன் விஜயேந்திரன் (கொழும்பு), நிக்ஷன் பார்த்தீபன் (மாணவன், யாழ்ப்பாணக் கல்லூரி) வைதேகி (மாணவி, உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரது அன்புத் தந்தையும் செல்லையா சுந்தரம்மாவின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று வெள்ளிக்கிழமை 30-5-97 பிற்பகல் 3.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
விஜயபார்த்தீபன்
(மகன்)

(பார்மஸி லேன் முன்னால்)
மானிப்பாய் வீதி, மானிப்பாய்.

(சி/815)

## தம்பு பொன்னுத்துரை

சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த தம்பு பொன்னுத்துரை (ஆயுள்வேத வைத்தியர்) காலமாகி விட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லக்கண்டு, சிவநாதன் (கனடா), சிவமங்கை (ப நோ. கூ. சங்கம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுப்பிரமணியம், கமலாதேவி (கனடா), இராமநாதன் ஆகியோரின் மாமனாரும், லக்சனா, பிரசாந் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-05-97) காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி

(சி/819)

## கூட்டம்

கோண்டாவில், மே 30

யாழ். மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தின் உதவி மாவட்ட ஆணையாளர்களின் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (இ-71)

## மெய்வன்மை வகுப்பு இடம்பெறாது

யாழ்ப்பாணம், மே 30

மெய்வன்மை சட்ட விதிகள் தொடர்பாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், யாழ். இந்துக்கல்லூரியிலும் வார இறுதி தோறும் நடைபெற்றுவந்த கலந்துரையாடல் தொடரில் இவ்வார இறுதிக்கான வகுப்புகள் நடைபெறா என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (உ)

## இன்றைய கிரிக்கெட் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 30

ஹட்டன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ சென்பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துக்கல்லூரி — சென் பற்றிக்ஸ் மைதானத்தில் —

★ யாழ். இந்துக் கல்லூரியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி — யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில்.

★ ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரி — யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில். (உ-4)

## யாழ். இந்து மைதானம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தை மேலும் விரிவுபடுத்தி புனரமைக்கும் துரித நடவடிக்கைத் திட்டம் ஒன்றை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் செயற்படுத்த இருக்கின்றது.

இதற்கான ஏற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங்கத்தின் தலைவரும், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான நிதியைத் திரட்டுவது குறித்து சங்கத்தின் செயற்குழு நாளை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரியில் கூடி ஆராயவிருக்கின்றது. (உ)

## தொலைக்கல்வி பரீட்சை

யாழ்ப்பாணம், மே 30

யாழ். மாவட்ட தொலைக் கல்வி பயிற்சி ஆசிரியர்களின் செயல் முறைப்பயிற்சி பரீட்சைக்கான வினாத்தாள்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

கடந்த 23ஆம், 24ஆம் திகதிகளில் இப்பரீட்சை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டது.

பரீட்சை வினாத்தாள்கள் வந்து சேராததால் அச்சமயம் பரீட்சை நடைபெறவில்லை.

நாளையும், நாளைமறுதினமும் இப்பரீட்சை அந்த அந்த போதனா நிலையங்களில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3,11)

(மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்)

# 3 ஆம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் துணை



தவப்பேறு: 11 — 01 — 1960

சிவப்பேறு: 03 — 06 — 1994

திருமதி
## ஞானலக்ஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி

ஆசிரியை B. A. (HONS)

திதி: 30 - 05 - 1997

"இமைப் பொழுதும் எம் நெஞ்சில்
இறவா அன்பே — ஞானா"

அன்புக்குரிய
கணவர், அம்மா, சகோதரி,
மாமாமார், மாமிமார், மைத்துனர்கள்,
பெறாமக்கள், மருமக்கள், உறவினர்கள்.

33, கைலாசபிள்ளையார் வீதி,
நல்லூர்.

(சி/805)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்தம்பி பாறுவதி

நுணாவில் மத்தி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னத்தம்பி பாறுவதி காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முலைகுடி சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், செல்லையா (இளைப்பாறிய ஆசிரியர்), சதாசிவம் (இளைப்பாறிய இராணுவ உத்தியோகத்தர்), செல்லத்துரை, (இளைப்பாறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர்), காலஞ்சென்ற இரத்தினசிங்கம் (இளைப்பாறிய இராணுவ உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதிகள் செல்லையா சரஸ்வதி, சதாசிவம் றோஸ்மேரி, இரத்தினசிங்கம் இராஜேஸ்வரி, செல்லத்துரை இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வமேனன், செல்வரமேஸ் (லண்டன்), பிரான்ஸிஸ் (சுவிஸ்), லில்லி (ராணி—கொழும்பு), நிமலநாதன் (டென்மார்க்), சாந்தகுமாரி (கொழும்பு), கமலநாதன், வசந்தகுமாரி, சுரேஸ்குமார் (இந்தியா) சுதர்சனா (இந்தியா), கிரிசாந்தி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு பாட்டியும், கிர்ஷிகா (சுவிஸ்) டர்ஷிகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 29 - 05 - 97 அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

(சி/818)

திருமதி
## ஞானரத்தினம் கனகரத்தினம்

(நிம்மதி, சங்கானை)

சங்கானை தேவாலய வீதியைச் சேர்ந்த திருமதி ஞானரத்தினம் கனகரத்தினம் 29-05-97 அன்று மாலை காலமானார்.

அன்னார் இளைப்பாறிய P.W.D. ஓவசியர் பொன்னையா கனகரத்தினத்தின் (நிம்மதி) அன்பு மனைவியும் பத்மராஜன் (கணக்காளர், டிக்கோயா), பத்மராணி, இரவீந்திரன் (லண்டன்), குணரதி (பல்வைத்தியர், லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இந்திரா, சிவன்நேசன் (இளைப்பாறிய பொறியியலாளர். இலங்கை, மின்சார சபை), அம்பாளிகை, லோகேந்திரா (பொறியியலாளர், பெங்களூர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவானி (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்), திருமதி சிவாஜினி — கருணாகரன், சிவரஞ்ஜன் (பௌதீக விஞ்ஞான பீடம் யாழ். பல்கலைக்கழகம்), சிவாஞ்சலி, இராஜயோகினி. ரஜீவ், சஞ்சீவ், சுஜீத்தா, சஞ்ஜே, சியாமா, டோன், ஜேசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜெனுசனின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30-5-97) பி.ப. 1-00 மணிக்கு அவரின் இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
பொ. கனகரத்தினம்
(கணவர்)

'நிம்மதி'
தேவலாய வீதி,
சங்கானை.

(47500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசவத்தின் போது ஆண்டுதோறும் 5 லட்சம் பெண்கள் உயிரிழப்பு!

### ஐ. நா. வெளியிடும் திடுக்கிடும் தகவல்

லண்டன், மே 30

பிரசவம் தொடர்பான பிரச்சினைகளால் ஆண்டுதோறும் 5 லட்சம் பெண்கள் உயிரிழக்கின்றனர்.

ஐ. நா. அமைப்பு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது:

பிரசவப் பெண்களின் மரணங்களில் பெரும்பாலானவை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே சம்பவிக்கின்றன.

மிகவும் சுலபமான, செலவு குறைந்த சுகாதார நலத் திட்டங்கள் மூலமும், கருத்தடைச் சாதனங்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ளச் செய்வதன் மூலமும் இந்த அநியாய உயிரிழப்புக்களைத் தவிர்க்க முடியும் என்று ஐ. நா. சனத்தொகை நிதியத்தின் வருடாந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

வன்முறை, பாகுபாடு, சுகாதாரக் குறைபாடு ஆகியவற்றினால் உலகில் பெண்களின் உரிமைகள் அவமதிக்கப்படுகின்றன, புறக்கணிக்கப்படுகின்றன என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# இந்தோனேசியாவில் நேற்று வாக்களிப்பு

ஜகார்த்தா, மே 30

இந்தோனேசிய பொதுத்தேர்தலில் வாக்களிப்பு நேற்று நடைபெற்றது. கிழக்குப்பகுதியைச் சேர்ந்த மக்கள் முதலில் வாக்களிக்கத் தொடங்கினர்.

உலகின் நான்காவது பெரிய நாடான இந்தோனேசியாவில் ஒருகோடி 25 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

நாடாளுமன்றத்திற்கு 425 உறுப்பினர்களை அவர்கள் தேர்ந்தெடுப்பர். இராணுவம் 75 பேரை நியமிக்கும்.

வாக்களிப்பின் போது வன்செயல்களைத் தடுக்க இராணுவம் தயாராகி வருகின்றது.

கடந்த ஒரு மாதகால பிரசாரத்தின்போது நிகழ்ந்த வன்செயல்களிலும் பிற சம்பவங்களிலும் மொத்தம் 260 பேர் பலியாகியுள்ளனர்.

பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் வாக்குச் சாவடிக்குச் சென்று தங்கள் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்த வேண்டும் என்று அதிபர் சுஹார்ட்டோ தொலைக்காட்சி மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தோனேசியாவில் மூன்று கட்சிகள் மட்டுமே தேர்தலில் போட்டியிட அனுமதி பெற்றுள்ளன. கடந்த 30ஆண்டுகளாக ஆளும் கோல்கர் கட்சி ஒன்றே எல்லாத் தேர்தல்களிலும் வெற்றியீட்டியது. (ஐ-5)

### கடற்படை வசதிகள் பங்கீடு

# ரஷ்யா - உக்ரேய்ன் இணக்கம் கண்டன

மொஸ்கோ, மே 30

கருங்கடற் பகுதியிலுள்ள சோவியத் கடற்படை வசதிகளை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பதில் ரஷ்யாவும், உக்ரேய்னும் இணக்கம் கண்டுள்ளன.

இது தொடர்பாக இரு நாடுகளின் பிரதமர்களும் மூன்று உடன்பாடுகளில் கையெழுத்திட்டனர். 'ஷெர்ரவர்ப்போல்' துறைமுகத்தின் 80 சதவீத வசதிகளை ரஷ்யா 20 ஆண்டுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள இந்த உடன்பாடு வகை செய்கின்றது.

அந்தத் துறைமுகத்தைத் தான் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று ரஷ்யா இதுவரை கோரி வந்தது. இந்த உடன்பாடு முக்கியமான ஒன்று என உக்ரேயின் பிரதமர் லொஸரண்கோ வர்ணித்தார். (ஐ-5)

# பிரியங்காவுக்கு அரச குடியிருப்பு ஏன்?

புதுடில்லி, மே 30

திருமதி பிரியங்கா காந்திக்கு புதுடில்லியில் அரச பங்களா வழங்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை விசாரணைக்கு ஏன் அனுமதிக்கக்கூடாது என விளக்கம் கேட்டு மத்திய அரசுக்கு டில்லி உயர் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

திருமதி பிரியங்கா காந்தி முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகளாவார். மேலும் இவர் எந்தவொரு அரச பதவியையும் வகிக்கவில்லை.

அப்படி இருந்தும் பாதுகாப்புக்களுடன் கூடிய அரச குடியிருப்பு வழங்கப்பட்டிருப்பது தற்பொழுது சர்ச்சையைக் கிளப்பி உள்ளது. (இ-10)

# மற்றொரு நகரமும் தலிபானின் வசம்

காபூல், மே 30

ஆப்கானிஸ்தானில் தலிபான் மக்கள் படையினர் புலேகுமேரி என்ற நகரைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர், நாட்டின் வடபகுதியில் இது பெரிய நகரமாகும்.

நகரைக் கைப்பற்றிய பின் உள்ளூர் மக்களிடமிருந்து ஆயுதங்களைத்திரட்ட படையினர் முயற்சி மேற்கொண்டதும் அங்கு பதற்றம் நிலவியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை - அண்மையில் கைப்பற்றிய மஸாரே ஷெரீப் நகரில் இருந்து தலிபான் படையினர் பின்வாங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு தலிபான் எதிர்ப்புப்படையினருடன் கடும் சண்டை நடைபெற்றுள்ளது. [ஐ - 5]

# தெரேசா நியூயோர்க்கில்

அன்னை தெரேசாவும் அவரது ஆச்சிரமத்தின் புதிய தலைவியான சகோதரி நிர்மலாவும் ரோம் விஜயத்தை முடித்துக்கொண்டு நியூயோர்க் சென்றுள்ளனர். (ஐ)

# சகல அதிகாரங்களும் கபீலா வசமே!

### கொங்கோவில் அறிவிப்பு

கின்ஸாசா, மே 30

ஜனநாயக கொங்கோவின் புதிய அதிபராகத் தன்னைப் பிரகடனம் செய்துள்ள கபீலா புதிய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வரும் வகையில் எல்லா அதிகாரங்களையும் தாமே வைத்திருக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

நிர்வாக மற்றும் இராணுவ அதிகாரிகளின் அதிகாரங்கள் அனைத்தும் தன்னிடமே இருக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

கொங்கோ தொலைக்காட்சி இந்த அறிவிப்பை வெளியிட்டது.

இதேவேளை —அமெரிக்காவின் துணை நிதியமைச்சர் லாரன்ஸ் கிம்ஸ் கொங்கோவுக்கு உலக நாடுகள் அனைத்தும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை —

நேற்று கின்ஸாசாவில் பொது மக்கள் கலந்து கொண்ட வைபவம் ஒன்றில் லோறன் சபீலா கொங்கோவின் அதிபராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

# உலக அரங்கில்

## அதிபர் கிளின்ரன் அழைப்பு

வாஷிங்டன், மே 30

அமெரிக்க அதிபர் கிளின்ரன் முன்னைய கம்யூனிஸ்ட் நாடுகளை விரைவாக ஐரோப்பியச் சங்கத்தில் சேரும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் ஐரோப்பாவை மீண்டும் உருவாக்கும் மார்ஷல் திட்டத்தைப் பாராட்ட நெதர்லாந்தின் 'த ஹேக்' நகரில் உரையாற்றும் போது அவர் இந்த அழைப்பை விடுத்தார்,

சோவியத் யூனியனையும் உள்ளடக்கிய ஒன்றுபட்ட ஐரோப்பாவை உருவாக்க வேண்டும் என்று அவர் சொன்னார். (ஐ-5)

# பிரிட்டிஷ் அமைச்சரவையில் அதிபர் பில் கிளின்ரன் உரை

### பாரம்பரியத்துக்கு புறம்பான நிகழ்வு

லண்டன், மே. 30

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் நேற்று பிரிட்டனுக்கு விஜயம் செய்து புதிய தொழிற்கட்சிப் பிரதமர் ரொனி பிளேயரை சந்தித்தார்.

பிரதமர் ரொனி பிளேயரின் அழைப்பை ஏற்று பிரிட்டிஷ் அமைச்சரவைக் கூட்டத்தில் அதிபர் கிளின்ரன் உரையாற்றினார்.

பிரிட்டனின் பாரம்பரிய வழக்கத்துக்கு மாறாக அதிபர் கிளின்ரனுக்கு அமைச்சரவையில் உரையாற்றும் கௌரவ அந்தஸ்தை பிரதமர் பிளேயர் வழங்கியுள்ளார். (ஐ)

## 14 வயதுச் சிறுவனுக்கு 18 மாதச் சிறை

வாஷிங்டன், மே 30

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் 14 வயது பள்ளிச்சிறுவன் ஒருவனுக்கு நீதிமன்றம் 18மாதச் சிறைத் தண்டனை அளித்துள்ளது.

பரீட்சையில் தனக்குக் குறைந்த மதிப்பெண்களை வழங்கிய ஆசிரியர் மீது கோபம் கொண்ட இந்தச் சிறுவன், ஆசிரியரின் தேநீர் பாத்திரத்திற்குள் போதை மருந்துகளை இரகசியமாகக் கரைத்து விட்டானாம். (ஐ-5)


பரீட்சைப் பெறுபேறுகள்
திருப்தியாக அமையாவிடின்

காலத்தை வீணாக்காது கற்பதற்கு
இன்றே இணையுங்கள்

**O/L DAY CLASS**

(காலை 8. 00 மணி முதல் பி. ப, 1. 00 வரை)

**6 மாத துரித மீட்டல் வகுப்பு**

எம்முடன் இணைந்தவர்கள்
உயர்வது உறுதியானதே!

ESTD:- 1973 REGD:- № J/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY.

(47486)



**யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**

க.பொ.த. (உயர்தரம்) அனுமதி 1999

கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதப் பிரிவுகள்

மேற்படி பிரிவுகளுக்கான வகுப்புக்கள் 09- 06- 97 இல் ஆரம்பமாக இருப்பதனால் உங்களுடைய விண்ணப்பப் படிவங்களை 05 - 06 - 97 இற்கு முன்னதாக நிரப்பிக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

- அதிபர்

(47490)



**யாழ்ப்பாணக் கல்லூரி**

**வட்டுக்கோட்டை**

க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில்
சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற
பின்வரும் மாணவர்களை

**மனதார வாழ்த்துகின்றோம்**

| | டீ | சீ | எஸ் | வரவில்லை (Aes) |
|---|---|---|---|---|
| ஜெயப்பிரியா ஜெயவீரசிங்கம் | 7 | 1 | | |
| பிரதீபா யோகேன்திரராஜா | 7 | | 1 | |
| பவானி நடராஜா | 7 | | | ★ |
| விஷ்ணுதேவி இராஜசிங்கம் | 7 | | | ★ |
| சிவஜா சிதம்பரநாதன் | 6 | 1 | | ★ |
| கோபிகா வேலாயுதம் | 6 | 1 | | ★ |
| கலானி இராமச்சந்திரன் | 5 | 3 | | |
| ரேவதி தேவதாசன் | 5 | 3 | | |
| கனகரட்ணம் ஜெகஜீவன் | 5 | 2 | 1 | |
| சுஜித்தா ஸ்கந்தராஜா | 5 | 2 | | ★ |

அதிபர், ஆசிரியர்கள்.
பெற்றோர், பழைய மாணவர்கள்.

யாழ்ப்பாணக்கல்லூரி,
வட்டுக்கோட்டை.

(சி-808)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


**விற்பனைக்கு**

இந்தியன் 10, H.P. டீசல் என்ஜின்கள் விற்பனைக்கு உண்டு. ஸ்ரீராஜ் யாழ், ரெக்ஸ், வட்டு. கிழக்கு, சித்தன்கேணி. (வட்டு, இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள ஒழுங்கை). [47478]

**வினாத்தாள் A/L**

N I E. யினால் வெளியிடப்பட்ட புதிய பாடத்திட்ட மாதிரி வினாத்தாள் (கலை, வர்த்தகப் பாடங்களுக்குரியது) விற்பனையாகிறது. அறிவகம் புத்தகசாலை, (கலை வர்த்தகக் கல்லூரி முன்பாக) வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். [47468]

**தவறிவிட்டது**

சிங்கராஜா சலஜா என்பவரது விசேட அடையாள அட்டை தாவடிக்கும், ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'வசந்தா வாசம்' ஸ்ரேசன் றோட், கொக்குவில், என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். [47250]

**புத்தகப் பிரியர்களே!**

புதிய தமிழ் வெளியீடுகள் ஏராளம்; வாருங்கள்; பாருங்கள்! எடுத்து வாசியுங்கள், அறிவைப் பெருக்குங்கள். லிங் லெண்டிங் லைபிரறி Ling Lending Library, (41, தபாலக வீதி, சாவகச்சேரி. (47099)


## தொலைக்கல்வி பரீட்சை

வட்டுக்கோட்டை தொலைக்கல்வி பயிற்சி ஆசிரியர்களுக்கான செயல் முறைப் பரீட்சை நாளை சனிக்கிழமை மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறும். பயிற்சி ஆசிரியர்கள் அனைவரையும் மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு வருகை தருமாறு சிரேஷ்ட போதனாசிரியை திருமதி. சி.திருநாவுக்கரசு அறிவித்துள்ளார்.


**நெல்லியடி கல்வி நிலையம்**

**O/L DAY CLASS**

**துரித மீட்டல் வகுப்பு**

ஞாயிறு மு. ப. 8.30 மணி ஆரம்பம்.

வகுப்பு நேரம்:
காலை 8.30—பி. ப. 1.30 வரை.

நெ. ம. ம. வீதி
(நெல்லியடி சந்திக்கருகில்)
- நிர்வாகி

(47482)

**AL 97**

**மாதிரி**

வினா - விடை வகுப்புக்கள்
இ. நாகரிகம்
இ. சமயம்
ஆரம்பம்: 31-05-97
12.00 மணி

ஆசிரியர்:-
S. அருள்நங்கை

(மாதிரி வினாத்தாள்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்)

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி - யாழ்.
(47465)


## வாழ்த்துகின்றோம்

இன்று மணிவிழாக் காணும்
புங்குடுதீவு மூத்தநயினார்புலம்
வீரகத்திவிநாயகர் கோயில் ஆதீனகர்த்தாவும்
யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை பேராசிரியருமான

**திரு. விநாயகமூர்த்தி சிவசாமி**

அவர்களைப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

பிரம்மஸ்ரீ சி. சிவகுமார சர்மா தம்பதிகள்
புங்குடுதீவு.

(47477)


**SUBRA கல்வி நிறுவனம்,**
சித்தன்கேணி.

**O/L DAY CLASS**

| | |
|---|---|
| கணிதம் | - திரு. கணேந்திரன் |
| விஞ்ஞானம் | - திரு, T. சுதாகர் |
| தமிழ் | - திரு. சாந்தன் |
| ஆங்கிலம் | - திரு. இரவீந்திரன் |
| சமூகக்கல்வி | - திரு. ஐங்கரன் |
| வர்த்தகம் | - திரு. சிதம்பரம் |
| சமயம் | - திரு. ஜெயா |

ஆரம்பம்: **05 - 06 - 97** (வியாழன்)
காலை 9-00 மணி

**98, 99 A/L**

நாடகமும் அரங்கியலும்
திரு. சத்தியா
நடைபெறுகின்றது. (சி-804)


## சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு கருத்தரங்கு

(ஆசிரியர், அதிபர்களுக்கு மட்டும்)

**முக்கிய விடயம்:**

சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்:

இடம்: **யாழ். இந்து மகளிர் கல்லூரி**
நாள்: **30 - 05 - 97 வெள்ளிக்கிழமை**
நேரம்: முற்பகல் 9.00 மணி தொடக்கம்
பிற்பகல் 2.30மணி வரை (பழைய நேரம்)

ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் வெளியிட்டுள்ள பிரதான நூல்கள் பார்வைக்கு வைக்கப்படும்.
(விற்பனைக்கல்ல)

செயலாளர்
ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

28-05-97 (சி/798)

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு : 03 — 05 — 1955



உதிர்வு : 30 — 05 — 1991

அமரர்
**சுப்பிரமணியம் தெய்வேந்திரராசா**
(முன்னாள் ஊழியர், யாழ். போதனா வைத்தியசாலை)

துள்ளித்திரிந்து எம்கலி தீர்த்த தெய்வமே!
கள்ளமற்ற உள்ளத்தை விரும்பியோ
எல்லித்தனையும் இரக்கமின்றியே
பொல்லாத காலன் எம்குலக் கொழுந்தைக்
கவர்ந்தனனே!

ஆண்டுகள் ஆறு சென்றும் மாறுமா எம்துயரம்
மாண்டு மடியுமட்டும் அகல்விளக்காய் விகசித்து
ஒளிர்வாயே!

மீண்டும் ஒருக்கால் வாராயோ தெய்வமே!
கண்ணீர் முத்துக்களை நின்பாதத்தில்
சொரிகின்றோம்.

பாசத்தின் ஊற்றாக விளங்கும்
என்றும் நினைவு மாறாத:

அம்மா, சின்னையா, மாமி,
அக்காமார், அத்தான்மார், அண்ணர்,
மருமகன், பெறாமக்கள்.

41/2, ஆத்திசூடிவீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (47461)

## வாழ்த்து

**பேராசிரியர் விநாயகமூர்த்தி சிவசாமி**

அவர்களின் (தலைவர், சமஸ்கிருதத்துறை) மணிவிழாவும் அவரது சேவையைப் பாராட்டும் மலர் வெளியீடும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மு. ப. 9.30 மணிக்கு இடம்பெறுகின்றது.

மணிவிழாக்காணும் பேராசிரியர் வி. சிவசாமி அவர்களின் கல்வி, கலை ஆய்வு, சமூக, சமய பணிகளைப் பெரிதும் பாராட்டுவதோடு அவர் நீடூழி வாழ்ந்து, மேலும் அரிய சேவைகளையாற்ற வேண்டுகின்றோம்.

புவியியல் துறையினர்,
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/807))

## தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கத்தின் இதய அஞ்சலிகள்

எமது சங்கத்தின் மதிப்பிற்குரிய முன்னாள் போஷகரும், சங்கத்தின் உறுப்பினர்களாகிய
**ரமேஸ்குமார், சந்தோஷ்குமார், சதீஸ்குமார்**
ஆகியோரின் அன்புத்தந்தையுமாகிய

**அமரர் முத்தையா பொன்னுத்துரை**

அவர்களின் மறைவையொட்டி
அன்னாரின்ஆத்மாசாந்தியடைய துர்க்கை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

தெல்லிப்பளை
இந்து இளைஞர் சங்கம்.

(47487)

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து, உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு, இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும், எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்- த. தி

(47196)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 06 — 10 — 1946



விண்ணில்: 16 — 04 — 1997

**அமரர் கனகன் தங்கராசா**

**திதி: 30 - 05 - 1997**

(முன்னாள் நடத்துநர், இ. போ. ச, பருத்தித்துறை)

எங்கள் வீட்டில் சுடர் விட்டு
எரிந்த விளக்கு அணைந்ததுவோ?
உங்கள் அன்பு அரவணைப்பு
உதிரம் வரையும் சென்றோடத்
தாங்கி எம்மை வளர்த்திட்ட
தெய்வம் நீங்கள்
உங்கள் முகம் காண
ஏங்கி இரங்கி ஓடி வந்தோம்
எம்மால் காண முடியவில்லை
இறைவன் நிழல் என்றென்றும்
இருக்க தினமும் இறைஞ்சுகிறோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும், அந்தியேட்டி கிரியையில் பங்குகொண்டோருக்கும், ஆறுதல் மொழி கூறியோருக்கும் எமது நன்றியறிதலைக் கூறிக் கொள்கின்றோம்.

பாசமிகு:
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

வல்லை றோட்,
தொண்டமானாறு,
தற்காலிக வசிப்பிடம்:
கலைமகள் ச. ச நிலையம்
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(47479)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புங்கன்குளம்

# வில்லையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்






## வருடாந்த பொங்கல் விழாச் சிறப்பிதழ்



30 – 05 – 1997



# அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு அற்புதக் காட்சிகளைக் காணும் வாய்ப்பு

எங்கள் உள்ளம் ஆளுகின்ற ஆற்றல்மிகு தாயே
எங்கும் மங்கலங்கள் சூழ்ந்திருக்கும் நாகபுரத் தாயே
எங்கும் வெந்தணலைக் குளிரவைக்கும் அதிசயத் தாயே
தினம் எங்களுக்காய் ஆடுகின்ற ஏற்றமிகு தாயே
பொங்கும் புகழிருக்கும் புங்கன்குளத் தாயே
நாங்களுன்னைப் பாடிடுவோம் பார்வதியே தாயே
நாளுமெனைத் தேடிவந்து நாகமகள் தாயே
நல்ல வில்லவ மரத்தடி அருள்வீர் நாகபூஷணித் தாயே

பக்திப் பெருக்கும் தெய்வீக அம்சங்களும் நிறைந்து விளங்கும் பல ஆலயங்கள் யாழ். குடாநாட்டிற்கு பல பாகங்களிலும் திலகமிட்டிருப்பதை நாம் அனைவரும் அறிவோம். நாட்டின் அமைதியற்ற சூழ்நிலைகள் காரணமாக பல திருத்தலங்களின் திருவிழாக்களும் பூசைகளும் வேறு வேறு இடங்களில் நடைபெறுவதும் அடியார்களின் நேர்த்திக்கடன்கள் வேறு வேறு ஆலயங்களில் நிறைவேற்றப்படுவதும் நம் பிரதேச வழக்கமாகிவிட்டது.

இந்த வகையிலே யாழ். குடாநாட்டின் புங்கன்குளம் பகுதியில் தோன்றி அருள் பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருளாட்சியேயாகும். ஆனால் இவ்வம்மனின் புங்கன்குள அருள் தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்டதொன்றன்று. இற்றைக்கு சுமார் இருபத்தொன்பது வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்திலே தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்து கொள்வார்கள்.

அழகிய பெரும் தெரு, அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை. அறிவும். ஆற்றலும் தெய்வீகமும் நிரம்பியிருக்கும் மக்கள் சூழ்ந்த அயல் இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புதமரத் தோப்புகள் இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கிறது அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வமரம்; இந்த மரத்தின் அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று.

அக்காலத்தில் இந்த வளவுக்குள் குடியிருந்த அடியவர்கள் அம்மனின் அருளையும் அருள் தோற்றத்தையும் அற்புதங்களையும் பல தடவைகள் கண்டு வியந்து தெய்வீக மேலீட்டினால் அந்த இடத்திலே சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆதரிக்க முற்படலாயினர். காலப்போக்கிலே அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்களாயினர்.

யாழ். நகரில் புங்கன் குளம் பகுதியிலே வில்லை மரத்தடியிலே அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினால் இவ்வாலயம் தெய்வீக நிலையினால் மிக மிக மேலோங்கியுள்ளது குறிப்பிடத்தக்க விடயம்.

இந்த ஆலயத்திற்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சி வச நிலை, அம்பாளைத் தரிசிக்க வரும்போது காணக் கூடிய அற்புதக் காட்சிகள்; அம்பாளுக்கு பூசைக்காக அடியார்கள் கொண்டு வந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை! அடியார்களின் நடமாட்டம் இல்லாத போது இங்கே நடக்கின்றதோர் இனந்தெரியாத தெய்வீக நடமாட்டம்; அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக் கடன்களினால் நோய், பிணி, தோஷங்கள் நீங்கிவிடும் தன்மை; அத்தன்மைக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாளின் திருவருளே துணை!

கருணை மழை பொழியும் புங்கன்குளம் வில்லையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பொங்கற் திருநாளாகிய இன்றைய தினத்திலே எமது நல்வாழ்விற்காக ஒன்று கூடிப் பிரார்த்திப்போமாக.

அடியார்களது மனம் நிறைய, வேண்டியதை வேண்டியவர்க்கு வேண்டியவாறு வழங்கும் ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் புகழ் எங்கும் ஓங்குக.

ஆத்மீகப் பாதை தவறியமையே எமது இன்றைய இன்னல்களுக்கெல்லாம் காரணம். அம்மா! தாயே! எமது வாழ்வில் உயர்ந்த பாதை தவறி நாம் செய்த பிழைகளை எல்லாம் பொறுத்து எமக்கு நல்வழி காட்டி நல்வாழ்வு தாரும் அம்மா! உமது திருவருளே எமக்குத் துணை.

சுபம்.

சமூகஜோதி கா. கணேசதாசன்,
ஓய்வுபெற்ற அதிபர்.
கொழும்புத்துறை.

## அன்னையே, அருள்புரிவாய்!

சைவ மக்களின் சமய வாழ்வில் ஆலய உற்சவங்கள் பிரதான அங்கம் வகிக்கின்றன. கொழும்புத்துறை மேற்கு புங்கன்குளம் வீதி வில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வைகாசிமாதப் பெரும் பொங்கல், தீக்குளித்தல் தினமாகிய இன்றைய திருநாளிலே பல்வேறு வகையில் துன்புறும் எமது அடியார்களுக்கு வேண்டும் வரம் கொடுத்து அருள் பாலித்து ஆறுதலளிக்குமாறு அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன் அடியார்கள் இன்புற்று இருக்க இறை ஆசி வேண்டி உள்ளன்போடு அம்பாளை வேண்டுகின்றேன்.

''நாட்டில் அமைதி, சமாதானம், சுபீட்சம் நிலவவும் மக்கள் மனநிம்மதியுடன் வாழவும் அருள்புரிவாய் ஸ்ரீ நாகபூஷணி அன்னையே''.

''எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க''.

சி. சி. வரதராசா,
சமாதான நீதிவான்,
கௌரவ பொதுச் செயலாளர்.
யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை,
''திருப்பரங் குன்றம்'',
கொழும்புத்துறை.

## அருளாசிச் செய்தி

அம்பிகை அடியார்களே!

கொழும்புத்துறை, புங்கன் குளம் வில்லையம்பதி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வைகாசிப் பொங்கல் நிகழ்ச்சி நிகழ்வதை இட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம். ஒவ்வொரு ஆண்டும் அன்னையின் அருளை வேண்டி சிறப்பான முறையிலே இவ் விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அன்னையின் அருள் எல்லா மக்களுக்கும் கிடைத்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ அன்னை பராசக்தியை பிரார்த்தித்து ஆசிகள் கூறுகின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்
முதல்வர்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## அருள்புரிவாய் அடிசரண்தாயி!

புத்தழகி பூவழகி புங்கங்குளக்காரி
எங்கும் பொங்கு கடல் சூழ்ந்த நல்ல நாகபுரத்தாயி
வித்தகி நீ விரதகி நீ வேப்பமரக்காரி
எங்கும் வெவ்வினைகள் வேரறுக்கும் வில்வமரத்தாயி
வெத்திலையின் மேல் நடக்கும் வெள்ளை மனக்காரி
எங்கும் வெந்தணலைக் குளிரவைக்கும் அதிசயத்தாயி
அத்தையும் நீ அம்மையும் நீ அருளுமக்காரி
அம்மா வந்தெமக்கு அருள் புரிவாய் அடிசரண்தாயி!


அருள்சுரக்கும் புதுமை அன்னை அருள் வேண்டுவோர்

புதிய முருகன் வணிக நிலையம்
(நியூ முருகன் ரேடர்ஸ்)
58p, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

யோ. சிவா
இல. 70 — 72 பழக்கடை,
நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.
எல்லா வகையான பழங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

★ காலத்தின் தேவைக்கேற்ப நவநவமான டிசைன் நகைகளை மங்கையர்மனங்களில் ரீங்காரம் செய்யும் வகையில் செய்து தருபவர்கள்
சோபனா நகைமாடம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நவீன மிக்சர் கமரா மூலம் அதி நுட்பமான முறையில் நிகழ்ச்சிகளை தயாரித்து விழாவினை மென்மேலும் மெருகூட்டுபவர்கள்
பழைய புதிய படப் பாடல்களை DISC ஒலி இழையிலிருந்துநேரடியாக Stereoவில் பதிவு செய்து பெற்றிட
"சுப்ப ஸோ வீடியோ"
ரவி ஒளி கானம்
100 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சிறீ சிவா ரேட்ஸ்
மிதிவண்டிமற்றும் உதிரிப்பாக விற்பனையாளர்,
72, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ ஒளிச்சுடர் விடும் பளிச்சிடும் நகைகளுக்கு..
சானுகா நகை மாடம்
198 H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தங்க நிறமென்றாலே தனி மௌசுதான் அதிலும் 'சிறி நதியா' வின் நகைகளை அணிந்த பெண்ணுக்கு எவ்வளவு பெருமை!
சிறி நதியா நகை மாடம்
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

★ நித்தம் நித்தம் புத்தம் புதிய டிசைன் நகைகளை அறிமுகப்படுத்துபவர்கள்
சிறி அமலா நகை மாடம்
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

● அவசர தேவையுணர்ந்து ஓடர்களை உடனுக்குடன் செய்து பெற்றிட
நந்தினி நகைமாடம்
218 H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் விநியோகத்துக்கு 6 ஆயிரம் மின்மானிகள்

## விரைவில் இங்கு எடுத்துவரப்படும்

திருநெல்வேலி, மே 30

பிரிட்டிஷ் உதவி நன்கொடைத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் மின் விநியோகத்தைத் துரிதப்படுத்துவதற்கு வசதியாக வீடுகளில் பொருத்தப்படும் சுமார் 6 ஆயிரம் மின் மானிகள் (மீற்றர்கள்) இங்கு எடுத்து வரப்பட உள்ளன. அத்துடன் மின் இணைப்பை வழங்கும் கேபிள் வயர்களும் கிடைக்கவுள்ளன.

மின்சார சபையின் வட பிராந்திய பிரதி பொது முகாமையாளர் வே. இராஜேந்திரம் இத்தகவலைத் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் உதவித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட 5 ஜெனரேற்றர்களில் நான்கு இங்கு வந்து சேர்ந்துள்ளன. ஐந்தாவது ஜெனரேற்றரையும் இங்கு எடுத்து வர முயற்சிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி, கப்பலில் இடம் ஒதுக்குதல் ஆகிய காரணங்களால் தாமதம் ஏற்படுவதாகத் தமக்குத் தெரிய வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த ஜெனரேற்றர் இங்கு கொண்டு வரப்படும் பட்சத்தில் வடமராட்சி பகுதி மின் விநியோகத்திற்காக ஒதுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

## விளையாட்டு நிகழ்வுகள்

வடமராட்சி, மே 30

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்கசபை முன்பள்ளியின் விளையாட்டு விழா எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை, முன்பள்ளி பொறுப்பாசிரியை திருமதி வ. திருச்செல்வம் தலைமையில் நடைபெறும்.

கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

கரணவாய் மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறும்.

இப்போட்டிக்கு கரவெட்டி கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா முதன்மை விருந்தினராகவும், கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன், கரவெட்டி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. அருளானந்தம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள்.

(இ-173)

# வழிபாட்டு தலங்கள் புனரமைக்கப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

வடபகுதியில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சேதமடைந்த வழிபாட்டுத் தலங்கள் புனரமைக்கப்படும் என்றும் —

வீடமைப்பு நிர்மாணத் துறை பொதுவசதிகள் அமைச்சு செவன நிதியத்தின் உதவியுடன் இதற்கான திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது என்றும் இலங்கை வானொலி தெரிவித்தது.

முதலாவது கட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் நாகவிகாரை, சங்கானை முருகமூர்த்தி கோயில், யாழ்ப்பாணம் சென். அன்ரனிஸ் தேவாலயம் என்பன புனரமைக்கப்படும்.

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் நிமல் ஸ்ரீ பாலடி சில்வா சம்பந்தப்பட்ட வழிபாட்டுத் தலங்களின் தலைவர்களிடம் மொத்தம் 12 இலட்சம் ரூபாவை ஒப்படைத்துள்ளார்.

கையளித்துள்ளார்:

வடபகுதியில் இராணுவ நடவடிக்கை காரணமாக 600-க்கும் அதிகமான வழிபாட்டுத் தலங்கள் சேதமடைந்துள்ளமை தெரியவந்துள்ளது. பாதுகாப்புப் படையினரின் மேற்பார்வையின் கீழ் இந்த புனர்நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5)

## சாரணர் கூட்டம்

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் ஏற்பாட்டில் குருளைச் சாரணர், தலைவர்களுக்கான விசேட கூட்டமொன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற உள்ளது.

(ஐ-152)


உ

சிவமயம்

# பேராசிரியர் வி. சிவசாமி

அவர்களின்

# மணி விழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத் தலைவர் பேராசிரியர் வி. சிவசாமி அவர்களின் மணிவிழாவும், அவரைக் கௌரவிக்கும் வகையில் ''அபிஜ்ஞானமாலா'' மலர் வெளியீடும் நடைபெறவுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைமை:

பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் அவர்கள்
(தலைவர், வரலாற்றுத்துறை)

இடம்:

கைலாசபதி கலையரங்கு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

காலம்:

30 - 05 - 1997 வெள்ளிக்கிழமை
காலை 9.30 மணி (புதியநேரம்)

நிகழ்ச்சி நிரல்

மங்கள இசை:

நல்லூர் பிச்சையப்பா குழுவினர்

மங்கள விளக்கேற்றல்:

இறைவணக்கம்:

வரவேற்புரை:

திரு. இரா. சிவச்சந்திரன்
(முதுநிலை விரிவுரையாளர், புவியியற்றுறை)

வாழ்த்துரை:

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(கலைப்பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

தலைமையுரை:

தலைவர் அவர்கள்

மணிவிழா வாழ்த்துப்பா:

இசைவாரிதி
பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்

மலர் வெளியீட்டுரை:

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
(தலைவர், இந்துநாகரிகத்துறை)

சிறப்புப் பிரதி வழங்குதல்:

பதிலுரை:

பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள்
(மணிவிழா நாயகன்)

கலை நிகழ்ச்சி:

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக் கழக நடனத்துறையினரும், இசைத்துறையினரும் இணைந்து வழங்கும் பரதநாட்டியச் சிறப்பு நிகழ்ச்சி.

நன்றியுரை;

திரு. ப. புஸ்பரட்ணம்
(முதுநிலை விரிவுரையாளர், வரலாற்றுத்துறை)

அன்பர்கள் அனைவரும் இவ்விழாவிற்கு வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

பேராசிரியர் வி. சிவசாமி
மணிவிழாக் குழுவினர்.

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

(சி/806)


## பல்கலை மாணவர்கள் ஆய்வு

நெடுந்தீவு, மே 30

முப்பது பேர் கொண்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர் குழு ஒன்று நெடுந்தீவு, நயினாதீவுப் பகுதிகளின் பொருளாதார இயல்பு நிலைகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

(ஐ)

## அம்பாள் . . . .

(ஐந்தாம் பக்கத் தொடர்)

மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குளம்பின் மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்திலே விரும்பி உறைகின்ற தன்மையை வெளிப்படுத்துகின்றன.

அம்பாளின் வருடாந்த பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமையாகும். அடியார்கள் அனைவரும் யாழ். நகரின் புங்கன்குளம் பகுதியிலே வில்வையடியிலே அமர்ந்து அருள் பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட் பெரும் தோற்றத்தை அணுகி பேரருள் பெற்றுய்வார்களாக. ''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.''

★


மணிவிழாக் காணும் பேராசிரியர்
திரு. வி. சிவசாமி அவர்களை
ஆசிகள் கூறி
# வாழ்த்துகின்றேன்

இலங்கை யாழ்ப்பாணம், பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறைத் தலைவராக இருந்து கடமையாற்றும் பேராசிரியர் திரு வி. சிவசாமி அவர்கள் இன்று மணிவிழாக் காணுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன் பேராசிரியர் அவர்களின் பல்கலைக்கழகக் கல்விப் பணிகளும், சமய, சமூகப் பணிகளும் மேலும் சிறப்புற்று விளங்கவும், அவர்கள் நீண்ட காலம் வாழவும் நயினை அம்பாளையும், புங்குடுதீவுக் கந்தனையும், சுதுமலை அம்பாளையும் வணங்கி ஆசிகள் பல கூறி வாழ்த்துகின்றேன்,

சுபமங்களம்!

இங்ஙனம்:

சிவஸ்ரீ ஐ. மஹேஸ்வரக் குருக்கள்
ஆதீனகுரு - ஸ்ரீநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம். நயினை,
பரம்பரைக்குரு - ஸ்ரீ கந்தசாமி கோயில் கிராஞ்சியம்பதி - புங்குடுதீவு
பிரதமகுரு - ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் - சுதுமலை
தலைவர் - இந்துக்குருமார் ஒன்றியம் யாழ்ப்பாணம்.
துணைத்தலைவர் - சேர். பொன். இராமநாதன் ஆய்வு நிறுவனம்
பரமேஸ்வரன் ஆலயம்.
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

அம்மன்கோயிலடி,
சுதுமலை,
மானிப்பாய்.
29-05-97

(47489)



மக்கள் மனதில் தமக்கென ஒரு நீங்காத இடம் பிடித்த

# வீடியோ கலாமினி

தமது சேவையை விரிவுபடுத்தும் நோக்குடன் சிங்கப்பூரில் இருந்து புதியரக மிக்சர்கள், புத்தம் புதிய கமராக்கள் வரவழைத்து திறம்பட நடத்தி வருகின்றார்கள்.

பூப்புனித நீராட்டு விழாவிற்கென்றே விசேடமாக அமைக்கப்பட்ட

சுழல் தாமரை, சுழல் ராட்டினம், மாடிப்படி செற், பலவர்ணக் குடைகள், சுழல் நட்சத்திரம், பிறை ஊஞ்சல் போன்ற பிரமாண்டமான செற் அமைத்து படப்பிடிப்புக்கு அழகு மிளிரச் செய்து வருகின்றார்கள்

அத்துடன் அழகிய இயற்கை எழில் கொஞ்சும் காட்சிகள் அமைந்த சொக்கட்டான் மணப்பந்தல் சேவையையும் நடத்தி வருகின்றார்கள்:

காட்சிகளுக்கேற்ப பல வர்ண ஆடைகள் மாற்றிப் படம் பிடிப்பதற்கென்றே எமது ஸ்தாபனத்தில் பூங்கா வசதியும் செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# வீடியோ கலாமினி

அச்சுவேலி

யாழ். நகரில் தொடர்புகளுக்கு:-

கல்யாணி
பஸ் நிலையம் முன்பாக,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(47485)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அவலம் நீங்காதா?

இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் போர் நிறுத்தப்பட வேண்டும். அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை நடத்தி இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணவேண்டும்.

இந்த வேண்டுகோள் இன்று நேற்றல்ல; கடந்த ஏழு வருடங்களாகவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல அமைப்புகளாலும், மகாநாடுகளிலும் விடுக்கப்பட்டு வருகிறது.

ஆகப்பிந்தி, உள்நாட்டில் தேசிய சமாதான சபையும் வெளிநாட்டில் நோர்வே திருச்சபையும் இக் கோரிக்கையை — வேண்டுகோளை — விடுத்துள்ளன.

வன்னியில் பெரும்போர் தொடுக்கப்பட்டுள்ள பின்னணியில் உயிரழிவுகளை விரும்பாத, சமாதானத்தையும், அமைதியையும், நியாயமான தீர்வையும் விரும்பும் எவரும் மனிதாபிமான நோக்கில் இந்த வேண்டுகோளை ஆதரிக்கவே செய்வர்.

ஆனால் போரை நிறுத்தவும், அதில் ஈடுபட்டுள்ள இரு சாராரும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவும் ஆக்கபூர்வமான, உருப்படியான, உறுதியான முயற்சிகள் எதுவும் இதுவரை நடைபெறவில்லை; கைகூடவும் இல்லை.

அதனால் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு மூன்றாந்தரப்பு ஒன்றின் உதவி — இன்னொரு விதமாகக் கூறுவதானால் மத்தியஸ்தம் — தேவை என்ற நிலை உருவாகியுள்ளது.

பிணங்கி நிற்கும் இரண்டு தரப்புகள் இணங்கி வந்து பேசுவது தாமதமானால் அல்லது இழுபட்டுக்கொண்டு போனால் போர் தொடர்ந்து அழிவு பெருகிக் கொண்டு போக வேண்டும் என்பதல்ல. அக்கறையுள்ள ஒரு தரப்பு சம்பந்தப்பட்டவர்கள் சந்தித்துப் பேசுவதற்கு ஆக்கபூர்வமாகச் செயற்படுவது ஒன்றும் புதியதும் அல்ல

உலக நாடுகள் பலவற்றின் உள்நாட்டுப் பிரச்சினைகள் இந்த வழியில் பயனுள்ள வகையில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதனால் உருவான போரை நிறுத்துவதற்கு மூன்றாந் தரப்பின் உதவியை ஏற்றுக் கொள்வதா, இல்லையா என்பதில் தீர்க்கமான முடிவுக்கு இன்னும் வரப்படவில்லை. இது விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு, கருத்து, காலத்துக்குக் காலம் மாறி வருகிறது.

1996 ஒக்ரோபரில் மூன்றாந் தரப்பின் மத்தியஸ்தத்தை ஏற்றுக் கொள்வதற்குத் தயார் என்று ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவின் ''புரொண்ட் லைன்'' சஞ்சிகைக்கு விசேட செவ்வி அளித்திருந்தார்.

ஆனால் இப்போது மத்தியஸ்தம் தேவையில்லை; இரண்டு பகுதியினரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துச் செல்லக் கூடிய ஒழுங்குபடுத்துபவர் போதும் என்கிறார்.

இவ்வாறு கருத்தைக் காலத்துக்கும் நேரத்துக்கும் மாற்றி மாற்றிக் கொண்டிருக்கக் காலம் கழிந்து போகும்.

பிரச்சினை தீராது; போர் நிற்காது; அழிவு குறையாது, தமிழர் அவலம் நீங்காது.

அவர்கள் இரண்டாந் தரப் பிரஜைகளாகவே வாழ்ந்து சீரழிய வேண்டியது தானா?

# காணாமற் போனோரின் பெற்றோர் ஜனாதிபதியைச் சந்திப்பார்கள்

## அரச அதிபர் ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 30

குடாநாட்டில் கைதாகி காணாமற் போனோர் தொடர்பாக காணாமற் போனோரின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த ஏற்பாடு செய்து தருவதாக யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் நேற்று உறுதி அளித்தார்.

யாழ். மாவட்டத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பாக நேற்று அரச அதிபரைச் சந்தித்த காணாமற் போனோர், கைதானோர் பாதுகாவலர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணியிடமே அரச அதிபர் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

குடாநாட்டில் காணாமற் போனவர்களின் பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் உடன் பிறப்புக்கள் சுமார் 500 பேர் நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்தனர்.

தமக்கு நேர்ந்த சோகங்களை அவர்கள் அழுது அழுது அரச அதிபரிடம் எடுத்துக் கூறினர்

காணாமற் போனவர்களின் உறவினர்கள் பலர் இக் கலந்துரையாடலில் உரையாற்றினர்.

இதன் போதே காணாமற் போனோர் மற்றும் கைதானோரின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் ஜனாதிபதியைச்சந்திக்க ஏற்பாடுசெய்து தருவதாக அரச அதிபர் உறுதிவழங்கினார். (இ-3-5)

## எழுப்புதல் கூட்டம்

நவாலி, மே 30

இலங்கை பெந்தெகொஸ்தே சபையின் எழுப்புதல் கூட்டங்களும் சுவிசேஷ ஆராதனைகளும் இன்று வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 3.30 மணிக்கு நவாலி தெற்கில் உள்ள சபையில் நடைபெறும். (இ-90-100)

## விசாரணைக் குழு மீண்டும் அடுத்த மாதம் யாழ். வருகிறது

யாழ்ப்பாணம், மே 30

''குடாநாட்டில் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் பாதுகாப்பு அமைச்சுக் குழு அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வந்து இறுதிக் கட்ட விசாரணைகளை நடத்தவிருக்கிறது''

யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் நேற்று தம்மைச் சந்தித்த காணாமற்போனோரின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச அதிபர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த தடவை உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையைப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் சமர்ப்பித்தேன்.

இவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாவிட்டால் அவர்கள் குடாநாட்டின் செயலக நிர்வாகத்தை தடை செய்யும் நிலைக்கு வந்துவிட்டார்கள் என்று அவரிடம் தெரிவித்தேன்.

காணாமற்போனோர் தொடர்பான பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக் குழுவை அடுத்த வாரம் அங்கு அனுப்புகிறேன். இன்னும் 200 பேரின் சாட்சியங்களை பெற்ற பின்னர் அக்குழு எனக்கு அறிக்கை தரும். அப்போது இவர்களது பிரச்சினைக்கு தீர்வு கண்டு விடலாம் என்று அவர் கூறினார்.

இப்படி அரச அதிபர் தெரிவித்தார். (இ-3-5)

## அரச அதிபருக்கு ஞாயிறன்று பாராட்டுவிழா நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 30

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் அவர்களை கௌரவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வைபவம் எதிர்வரும் ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்த வைபவம் சு. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும். த. பஞ்சலிங்கத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சு. மோகனதாஸ் அறிமுகவுரை நிகழ்த்துவார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், அருட்திரு. ஜே. பி. செல்வராசா அடிகளார், சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, வித்துவான் க. சொக்கலிங்கம் ஆகியோர் ஆசியுரைவழங்குவர்.

பாராட்டு பாமாலை வழங்கல், பொன்னாடை போர்த்தல், ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறஉள்ளன. (இ-3)

## அடுப்பில் வீழ்ந்து காயம்

நண்பகல் சமைத்துக் கொண்டிருந்த சமயம் மயக்கமுற்று அடுப்பில் விழுந்தவர் எரிகாயங்களுக்குள்ளானார்.

கல்வியங்காடு புதிய செம்மணி வீதிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்வகுமார் சுபத்திரா (வயது 18) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## ஒன்றுகூடல்

இணுவில் மத்தியகல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி கலாநிதி ஆ. சண்முகதாஸ் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

# உடல், உளப் பலம் பெறுவதற்கு உருத்திராட்ச மாலை அணியுங்கள்

உருத்திராட்சம் எப்படித் தோனறியது?

தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்தியுன்மாலி ஆகிய மூன்று அசுரர்களும் சிவபெருமானிடம் வரம் வாங்கினார்கள். அதாவது தங்கம், வெள்ளி, இரும்பு ஆகியவற்றினால் மூன்று கோபுரங்களை அளித்து அருளினார். இவற்றில் பறந்து திரிவதற்கும் அபூர்வ அஸ்திரங்களைப்பயன்படுத்துமாற்றலும் அவர்களிடம் இருந்தது. இதனால் அவர்கள் மூவுலகங்களையும் ஆண்டார்கள். இவர்கள் தேவர்களைத் துன்புறுத்தினார்கள். அசுரர் மூவரும் சிவபெருமானிடம் பெற்ற வரங்களை நல்ல செயல்களுக்குப் பயன்படுத்தவில்லை. வரங்களைத் துஷ்பிரயோகம் செய்தார்கள்.

இதனை சிவபெருமானிடம் சென்று தேவர்கள் முறையிட்டார்கள். ''சர்வேஸ்வரா! அசுரர்களுக்குத் தாங்கள் பெரிய வரங்களை அருளினீர்கள். அவர்கள் அதனை வைத்து, எங்களைத் துன்புறுத்துகிறார்கள். எங்களைக் காத்து அருள வேண்டும்' என்று வேண்டினார்கள்.

இறைவன் அவர்களின் துன்பத்தைக் கேட்டுக் கண்ணீர் சிந்தினார். அவர் சிந்திய கண்ணீரே ''உருத்ர — அக்ஷம்'' உருத்திராட்சம் எனப் பெயர் பெற்றது. சிவபெருமான் மூன்று அசுரர்களையும் வதம் செய்தார். இவ்வாறு சிவபுராணம் கூறுகிறது.

உருத்திராட்ச மரம் கிழக்கு ஆசியா, மலேசியா, ஆஸ்திரேலியா, பசுபிக் தீவுகள், நேபாளம், இந்தியா ஆகிய நாடுகளில் நிறைய[illegible]கிறது. இவை இரத்தச்சிவப்பு, வெண்மை, கறுப்பு ஆகிய நிறங்களில் உண்டு. ஒன்றில் இருந்து 25 வரை உள்ள எண்ணிக்கையான முகங்கள் உண்டு

சைவசமயத்தின் மிக முக்கியமான சின்னம் விபூதியும் உருத்திராட்சமும் ஆகும். 27 உருத்திராட்சம் உள்ள மாலை சிறந்தது என்பர். இதனைக் கொண்டு செய்யப்படும் ஜெபத்தினால் மந்திரங்களுக்கு விசேட பலன் உண்டு. அடியார்கள் காதில் - 3, மணிக்கட்டில் - 12, முடியில் - 36, கழுத்தில் – 27 முதல் 32 வரையும் மாலையாக 108 உருத்திராட்சங்கள் அணிவார்கள். இதனைப் பட்டுநூல், பவுண் கம்பி, பித்தளைக்கம்பி, வெள்ளிக்கம்பியில் கோர்த்தோ, கட்டியோ அணியலாம். பூணூலிலும் தரிக்கலாம்.

மலசலம் கழித்தல், யோகம் செய்தல், சௌனம் செய்தல் போன்ற நேரங்களில் உருத்திராட்ச மாலை அணியக்கூடாது.

**பலன்கள்**

உருத்திராட்சத்தில் உள்ள முகங்களுக்குள் அதிதேவதைகளைக் குறிப்பதாகத் தெரிவித்து அவற்றுக்கு வெவ்வேறு பலன்களும் கூறுவர். அவை வருமாறு.

1 முகங்கள். சிவபெருமான்-மனோதிடம், சகல காரிய சித்தி.

2 முகங்கள் - சிவபார்வதிக்கு-இச்சையைக் கட்டுப்படுத்தும், லட்சுமி கடாட்சம்.

3 முகங்கள்- அக்கினி பகவான்-வேலை இல்லாதவர்க்கு வேலை தரும்.

4 முகங்கள் - தரமதேவர்-சித்தப்பிரமையைப் போக்கும்.

**ஞானக்கதிர்**

5 முகங்கள் -காலனை அழித்த சிவனுக்கும்-இருதய நோயை நீக்கும்.

6 முகங்கள்- சுப்பிரமணியர்-மயக்கம், இரத்த அழுத்தம் நீங்கும்.

7 முகங்கள்— ஆதிசேஷனுக்கும்–ஆயுளை அதிகரிக்கும்.

8 முகங்கள் - விநாயகருக்கும்-செல்வத்தை ஈட்டும்.

9 முகங்கள்-காலபைரவருக்கும்-முத்திக்கு வழிகாட்டும். இருதய பலவீனத்தைப் போக்கும்.

10 முகங்கள்-விஷ்ணுவிற்கும் -இருமலைக் குணப்படுத்தும்.

11 முகங்கள்- நத்திரர்-தொற்று நோய்களை நீக்கும்.

12 முகங்கள்-சூரியதேவனுக்கும்-இந்திரிய பலத்தை வலுப்படுத்தும்.

13 முகங்கள்- காமதேவனுக்கும்-ஞானத்தைத் தரும்.

14 முகங்கள்-நீலகண்ட சிவன்-உடல்தேஜஸையும், உற்பத்தி ஒலியையும் உண்டாக்கும்,

பாலில் உருத்திராட்சத்தைப் போட்டு சிறிது நேரம் கழித்து அருந்தினால் சளியும், கசமும் நீங்கும். உருத்திராட்சம் பொருள் கொடுத்து வாங்கி அணிய வேண்டும்; இனாமாக வாங்கக்கூடாது.

உருத்திராட்ச மாலையை விரும்பியோ விரும்பாமலோ அணிபவர்களுக்குப் பலன் உண்டு. ஏகமணி உருத்திராட்சத்தை நீர் ஓட்டத்தில் விட்டால் எதிர்த்தோடும். இருமுகமணியை அணிந்து நெருப்பில் இறங்கினால் உடல் வேகாது. மூன்று முகம் அணிந்தால் ஆயுதங்கள் ஊறு செய்யாது. ஐந்து முகமணி நீரில் மூழ்கமாட்டாது நான்கு முகமணி மூழ்கி விடும். மணியில் பவுண் தன்மை உண்டு. இதனை நகை பரிசோதிக்கும் கல்லில் தேய்த்துப்பார்த்தால் பவுண் தன்மைதெரியும். உருத்திராட்சத்தின் மேல் பித்தளை ஒரு சதம் வைத்துச் சுற்றினால் விழமாட்டாது. இவற்றைச் சிவமகாபுராணம் கூறுகிறது.

உருத்திராட்சம் இரத்த அழுத்தம், காமாளை நோய், இருதயநோய், கபம், சளி என்பவற்றை நீக்குகிறது என்று விஞ்ஞானிகள் இப்போது கூறுகிறார்கள். இதில் இருந்து இவை என்றும் அழகுக்கு மட்டும் அணியப்படவில்லை. ஆத்மீக விஞ்ஞான பூர்வ பலன் உண்டு என்பதனை உணரலாம். உருத்திராட்சம் அணிவதால் மனதிடம் உருவாகின்றது.

உருத்திராட்சம் அணிந்து ஸ்நானம், தானம், ஜபம், ஓமம், வேதஅத்தியாயனம், பிதுர்த் தர்ப்பணம், சிவ, விஷ்ணு பூசைகள், சிரார்த்தம், புராணம், தேவாரம் ஓதுதல் என்பன செய்தல் வேண்டும்.

எல்லோரும் உருத்திராட்சம் அணிந்துதேகபலமும் மன பலமும் பெற்றுப் பல காலம் வாழவேண்டும் என்று சைவ சமயம் கூறுகிறது.

—சிவரா ஜசர்மா

## நாளை

**வைகாசி 17**

சனிக்கிழமை

திதி: தசமி

முன் இரவு 8.23 வரை.

நட்சத்திரம்: உத்தரட்டாதி

முன் இரவு 8 51 வரை

கரிநாள்

சுபநேரம்: 2 52-4.22

ராகுகாலம்: 8.52-10 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் கல்வியை ஆரம்பித்து ஆசிரியராக அதிபராக சிறப்புற சேவையாற்றி ஓய்வுபெறும் எங்கள் சங்கத் தலைவி

திருமதி M.G. தரைட்ணம்

அவர்களை பல சிறப்புகளுடன் நீடூழி வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா, மெதடிஸ்த பெண்கள்
உயர்தர பாடசாலை,
பருத்தித்துறை.

(சி/817)



## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
## காரியாலய இடமாற்றம்

மேற்படி செயலகம் 28-05-1997 தொடக்கம் யாழ்ப்பாணம் நவீன சந்தை மேல் மாடியில் இலக்கம் 19 இல் இயங்குகின்றது என்பதனை மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட அனைத்து வர்த்தகர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

குறிப்பு:- 1995 ஆம் ஆண்டு இடம் பெயர்வுக்கு முன் இயங்கிய கட்டடத்தில் இயங்குகின்றது.

தி. குஞ்சிதபாதம் — தலைவர்
த.தி. சிவதாசன் — உப செயலாளர்

(சி/816)



அன்றும் இன்றும் என்றென்றும்
யாழ். முன்னணி ஆசிரியர்கள்
ஒருங்கிணைந்த சேவை

## A/L 99

| | | |
|---|---|---|
| கணக்கியல் | — | திரு. பாலவாசன் |
| பொருளியல் | — | திரு. விக்கி |
| வர்த்தகம் | — | திரு. முரளி |
| வணிகப் புள்ளிவிவரவியல் | — | திரு ஜெயக்குமார் |
| அளவையியல் | — | திரு மகிந்தன் |
| தமிழ் | — | திரு. திருஞானம் |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — | திரு. பத்மராஜா |
| புவியியல் | — | செல்வி நிர்மலா |
| அரசியல் | — | திரு. ஜெயக்குமார் |
| கிறிஸ்தவம் | — | திரு. வசந்தன் |
| நாடகமும் அரங்கியலும் | — | திரு. சந்திரன் |

ஆரம்பம்:- 1 - 6 - 97 - 9 00 AM

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(47491)



சுன்னாகம்
பல நோ. கூ. சங்க பொதுமுகாமையாளர்
திரு. ந. சிவலிங்கம் அவர்கள்
ஓய்வு பெறுவதை முன்னிட்டு
## சேவைநலம் பாராட்டு விழாவும்
## பிரிவுபசார வைபவமும்

தலைமை: திரு. சி. குமரவேல் அவர்கள்
தலைவர், சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்.

இடம்: சுன்னாகம் பல நோ கூ.ச.மண்டபம்
காலம்: 31-05-97 சனிக்கிழமை
மு. ப. 10-00 மணி

முதன்மை விருந்தினர்
திரு. செ. பத்மநாதன் அவர்கள்
யாழ். மாவட்ட செயலாளரும், அரச அதிபரும்

சிறப்பு விருந்தினர்கள்
திரு. ஆ. மகாலிங்கம் அவர்கள்
பிரதேச செயலர், வலி தெற்கு.
திரு.எஸ்.கே.சண்முகநாதன் அவர்கள்
கூ. அ. உ. ஆணையாளர், யாழ் மாவட்டம்.
திரு. வே. பொ. பாலசிங்கம் அவர்கள்
ஆணையாளர், யாழ்ப்பாண மாநகரசபை
திரு. எஸ். சிவஞானம் அவர்கள்
பிராந்திய முகாமையாளர், இ.பெ.கூ. யாழ்ப்பாணம்
திரு. க. ஆனந்தராசா அவர்கள்
முகாமையாளர், மக்கள் வங்கி, சுன்னாகம்

முதன்மை விருந்தினர் அவர்கள் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிப்பார்கள்

பணிப்பாளர்களும்
பணியாளர்களும்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
28—5—97

(சி/[illegible])


## ஜே-73
## அ. அட்டை

யாழ். நகர் மேற்கு ஜே-73 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு இன்று காலை 9.00 மணி முதல் மேற்படி கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் வைத்து விசேட அடையாள அட்டை வழங்கப்படும்.

## ஓமந்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வித்தது.

படையினர் நடத்திய எதிர் தாக்குதலில் 6 புலிகள் உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றிரவும் தொடர்ச்சியாக ஆட்லறி தாக்குதல்களை புலிகள் நடத்தியதாக வவுனியா செய்தியாளர் அறிவிக்கிறார். (இ-3-21-164)

## குருநகர்...

(முதலாம் பக்கத் தொடர்)

7. 30 மணி அளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நீரில் மூழ்கிய படகில் எத்தனை பேர் இருந்தார்கள் என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

மூழ்கிய படகில் 30 பேர் இருந்தனர் என்று ஒரு தகவலும் 24 பேர் இருந்தனர் என்று மற்றொரு தகவலும் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் காரணமாக குருநகர் பகுதி நேற்று சோகமயமாகக் காட்சியளித்தது.

விபத்துக்குள்ளான படகில் பயணம்செய்தவர்களில் நால்வர் குருநகர் வந்துள்ளனர்.

குருநகர் வந்தவர்களில் 55 வயதுப் பெண் ஒருவர் தனது கணவனையும், தனது மகளையும், மகளின் 4 பிள்ளைகளையும் —

மற்றொரு இளம் குடும்பஸ்தர் தனது மனைவியையும், பிள்ளைகளையும் —

இன்னுமொருவர் தனது மனைவியையும், மாமியாரையும் -

மற்றும் ஒருவர் தனது மனைவி, மாமி, மச்சாள் ஆகியோரையும் இழந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

இவர்கள் ஈவினை, புத்தூர், குருநகர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற இப்படியான விபத்து ஒன்றில் 130 பேர் வரை கொல்லப்பட்டது. தெரிந்ததே.

படை நடவடிக்கைக்கு அஞ்சி இந்தியா சென்றுகொண்டிருந்த சமயமே அப்போதைய படகு விபத்து இடம்பெற்றது.

(இ-3-4-10-121-164)

## மானிப்பாயில்..

(முதலாம் பக்கத் தொடர்)

துரை நடராசா (வயது 51) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

சங்கானை, வல்லை வீதியைச் சேர்ந்த இரத்தினம் முருகதாஸ் (வயது 28) படுகாயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இறந்தவர்களின் சடலங்களும் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தின் போது படையினர் தரப்புக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து தகவல் எதுவும் இல்லை.

(இ-135-15)

## ஆர்ஜென்ரீனா....

(முதலாம் பக்கத் தொடர்)

நீருக்கடியான குண்டு ஒன்று வெடித்துள்ளதாகவும் —

விடுதலைப் புலிகள் வைத்த குண்டாக அது இருக்கவேண்டும் என்றும் — கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இக் கப்பலைத் திருத்துவதற்காக விசேட நிபுணர் குழு கொழும்பில் இருந்து நேற்று திருமலை வந்து சேர்ந்தது. [illegible] கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளது.

# யாழ். வருவோரை அழைத்துவர விசேட ஏற்பாடுகளைச் செய்க

## ஈ. பி. டி. பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 30

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வருபவர்களை அழைத்துவர விசேட ஏற்பாடு செய்யுமாறு ஈ.பி.டி.பி. அமைப்பு யாழ். நகர கமாண்டர் பிரிகேடியர் ஜயசுந்தரவை நேற்றுக் கேட்டுள்ளது.

பள்ளிக்குடாவில் இடம் பெற்ற படகு விபத்துப் போன்ற விபத்துக்கள் இனி இடம்பெறாது இருப்பதைத் தவிர்க்கும் வகையில் இடம் பெயர்ந்து வரும் மக்களைக் குருநகருக்கு அழைத்துவர விசேட ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்றும் —

நேற்று முன்தினம் இடம் பெற்ற விபத்தில் சிக்கியவர்களை தேடிக் கண்டுபிடிக்க இன்று தேடுதல் நடத்த ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் — அந்த அமைப்பு மேலும் கேட்டுள்ளது.

(இ-3)

## இறந்தோர் 16 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்)

★ பாலு அஞ்சலா (வயது 36)
★ பாலு சுனிதா (வயது 17)
★ பாலு விஜயநாத் (வயது 14)
★ பாலு தியோனோத் (வயது 9)
★ பாலு சுரோ (வயது 4)

இவர்கள் யாழ்ப்பாணம் பாங்சல் வீதியைச் சேர்ந்தவர்கள்

★ சபாரத்தினம் அழகம்மா (வயது 67—நவகிரி, புத்தூர்)
★ ஜெகநாதன் கமலமாலினி (வயது 20)
★ சஜனா ஜெகநாதன் (வயது 2)
★ கபேஸ் திவாகனி (வயது 21)
★ மாரிமுத்து முத்தம்மா (வயது 65)
★ தயாநிதி மாரிமுத்மு (வயது 20)

இவர்கள் ஈவினை, புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்தவர்கள்.

★ ஜெயந்திரா பத்மினி (வயது 22)
★ சங்கீதா ஜெயந்திரா (வயது 3)
★ பிரியா ஜெயந்திரா (வயது 1)
★ துரையன் இரத்தினம் (வயது 60)

இவர்கள் அச்செழு, நீர்வேலியை சேர்ந்தவர்கள்.

(இ-3)

## "ஐயோ எங்களை"...

(முதலாம் பக்கத் தொடர்)

பயணம் செய்த யாழ். கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த சந்தனம் செல்வக்குமார்என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விபத்தில் சிக்கி மூழ்கிய படகுக்கு முன்பாகச் சென்றுகொண்டிருந்த படகில் பயணம் செய்த அவர் விபத்து நடந்த விதம்குறித்து விவரிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

மல்லாவியில் இருந்து செவ்வாய்க்கிழமை மாலை 6மணியளவில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேருடன் நான் பூநகரி நோக்கி லொறி ஒன்றில் புறப்பட்டேன்.

இரவு 10 மணியளவில் பூநகரிக்கு வந்து சேர்ந்தோம். மறுநாள் அதிகாலை 4. 30 மணியளவில் ஒரு படகில் எமது பொருள்களை ஏற்றினோம். மற்றொரு படகில் நாம் ஏறினோம். இருபடகுகளும் கயிற்றால் பிணைக்கப்பட்டன.

இந்த நேரத்தில் எமது பிணைக்கப்பட்ட இருபடகுகளுடன் மற்றுமொரு படகும் பிணைக்கப்பட்டது. அதில் 30 பேர் வரையில் ஏற்றப்பட்டிருக்கலாம். அவர்களின் உடைமைகளும் அந்த படகிலேயே ஏற்றப்பட்டன.

அதிகாலை 5 மணியளவில் மூன்று படகுகளும் பிணைக்கப்பட்ட படகுகள் அணி புறப்பட்டது. நான் பயணம் செய்த முதல் படகிலேயே இயந்திரம் பொருத்தப்பட்டிருந்தது. அதுவே ஏனைய இரு படகுகளையும் இழுத்து வந்தது.

படகுகள் ஒரு மணித்தியாலம் வரை ஓடியிருக்கும் கடும்காற்று திடீரென வீசியது.

எமது இரு படகுகளுடன் பிணைக்கப்பட்டிருந்த மூன்றாவது படகில் இருந்து "தண்ணீர் வந்து விட்டது ஐயோ! எங்களைக்காப்பாற்றுங்கள்" என்று அபயக்குரல்கள் கேட்டன.

அடுத்த வினாடி அந்த படகு இரண்டாகப் பிளந்ததைக் கண்டேன்.

அந்தப்படகும் அதில் இருந்தவர்களும் கடலில் மூழ்குவதைக் கண்டோம். எமது படகில் இருந்த படகோட்டி உடனடியாக தனது படகின் இயந்திரத்தை நிறுத்திவிட்டு, வேறு சிலருடன் கடலில் பாய்ந்து அவர்களைக் காப்பாற்ற முயன்றார்.

எமது உடைமைகள் ஏற்றப்பட்டிருந்த இரண்டாவது படகிலிருந்த பொருள்களை வெளியே எடுத்து வீசினார்கள்.

நான் ஒரு நகைத் தொழிலாளி நான் கொண்டு வந்த நகைச் சாமான்கள், நகை செய்யும் உபகரணங்கள், பட்டறை சகல பொருள்களும் கடலில் வீசப்பட்டன. எம்முடன் வந்த மற்றொரு நகை தொழிலாளியின் நகைச் சமான்கள், உபகரணங்களும் அவ்வாறே கடலில் வீசப்பட்டன.

மூழ்கிய படகில் இருந்து காப்பாற்றிய சிலரை எமது உடைமைகளை ஏற்றி வந்த இரண்டாவது படகில் ஏற்றினோம். பின்னர் மூழ்கிய படகின் கயிற்றை வெட்டி விட்டு நாம் புறப்பட்டோம்.

இந்தப் படகில் இருந்து தப்பிய மூன்று இளைஞர்கள் "எமது உறவினர்கள் எல்லோரும் இறந்து விட்டார்கள் ஏன் நாம் யாழ்ப்பாணம் போக வேண்டும்" என்றுகூறி நீந்தி பள்ளிக்குடா நோக்கிச் செல்வதைக் கண்டேன்.

எம்மிடமிருந்த உடைமைகள் யாவற்றையும் இழந்து உடுத்த உடுப்புடன் குருநகர் கரை வந்து சேர்ந்தோம்.

இப்படி மேலும் கூறினார்.

## கால்நடையாக...

(முதலாம் பக்கத் தொடர்)

கொண்ட தாக்குதலில் ஓர் இராணுவ வீரர் உயிரிழந்தார். இருவர் காயமடைந்தனர்.

அதேவேளை—நேற்று முன்தினம் அம்பாறை—மகா ஓயா வீதியில் அறந்தலாவவில் இடம்பெற்ற மோதல் ஒன்றில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார்.

மற்றுமொரு சம்பவத்தில் பொலீஸ் வாகனம் கண்ணி வெடியில் சிக்கியதில் ஒரு பொலீஸார் காயமடைந்தார்.

(இ-3-4-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30-05-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org